DR. H. V. HANDE: On a point of order, Sir. Is the Hon. Speaker trying to support the Government by saying that I have not made an effective speech? (Interruption). No, no. It is very dangerous if the Speaker should take a party attitude. Mr. Speaker, Sir, you are in the Chair not to support any political party, if I know the rules properly. You may not agree with the points raised by me. One may think it is flippant and it is nothing. They may be thick-skinned and may say, 'whatever Hande says, he will say always like that'. They may be thick-skinned to criticisms and may not be sensitive. But the Speaker cannot support them.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் என்ன சொன்னார்கள் என்பது எனக்கு நன்றாக விளங்குகிறது. நான் அரசாங்கத்தை ஆதரித்ததாகச் சொன்னார்கள். அவர்கள் எஃபக்டிவ் ஆகப் பேசவில்லை என்று சொன்னதாகச் சொன்னார்கள். எஃபக்டிவ் ஆகப் பேசினார்களா, இல்லையா என்பதல்ல நான் சொன்னது, சட்டமன்ற மரபுகளுக்கு உள்ளடங்கிப் பேசுகின்ற கலையைப்பற்றித்தான் சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் கூட, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் இன்னும் காரசாரமாகச் சொல்லலாம், என்று சொல்லலாம். எப்படி நான் அரசாங்கத்தை ஆதரித்ததாகச் சொல்கிறார்களோ அதைப்போல அவர்களும் வேறுமாதிரியாகச் சொல்லலாம். அப்படிப்பட்ட வியாக்கியானங்களையெல்லாம் செய்து குழப்பத்திற்குள்ளாக்க வேண்டாம். இந்தச் சட்டமன்றத்தின் நடவடிக்கைகளை எப்படி நல்ல முறையில் நடத்திச்செல்ல வேண்டும் என்பது பற்றித்தான் என்னுடைய கவலையேதவிர, எஃபக்டிவ் ஆக இருக்கிறதா இல்லையா என்பது எல்லாம் பற்றி எனக்குக் கவலையில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த சபைக்கு முன்னால் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானமும், அடுத்து விவசாயிகள் நடத்திய போராட்டத்தை அரசு

1972 ஆகஸ்ட் 9] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஹாண்டில் பண்ணிய முறையும் சரியல்ல என்ற என்னுடைய கண்டனத் தீர்மானமும் வந்திருக்கிறது. இரண்டும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையொத்ததுதான். எந்த ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டால், நிறைவேற்றப்பட்ட பிறகு அரசு தொடர்ந்து செயலாற்ற முடியாது என்பதைத் தாங்கள் நன்றாக அறிவீர்கள். இதைப்போன்று நம்பிக்கையில்லாத் தீர்மானமும், கண்டனத் தீர்மானமும் 1970-ம் வருஷத்திலே இந்தச் சபை முன்னதாக வந்திருக்கிறது. அதற்கு முன்பு தங்களாலே குறிப்பிட்ட கொள்கையை அடிப்படையாக வைத்துக் கண்டிருக்கிறோம் என்ற தீர்மானம், 1964-ம் வருஷம் என்று நினைக்கிறேன், கொண்டுவரப்பட்டிருக்கிறது. 1957-ம் வருஷத்திலே இதே சபையிலே முதுகளத்தூர் சம்பவம்பற்றி நம்பிக்கையில்லாத் தீர்மானம் திரு. கல்யாணசுந்தரம் அவர்களால் கொண்டுவரப்பட்டது. 1952-ம் வருஷம் ராஜகோபாலாச்சாரியார் முதலமைச்சராக இருந்தபொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குப் பதில், நம்பிக்கை இருக்கிறது என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இப்படி 5 தடவைகள் எனக்குத் தெரிந்த வரையிலே வந்திருக்கின்றன. தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசு ராஜினாமாச் செய்துவிடும் என்று அன்றைக்கு யாரும் கொண்டுவரவில்லை. அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும், அரசுக்கு எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது, அந்த எண்ணிக்கையை வைத்துத் தீர்மானத்தை தோற்கடித்துவிட்டாலும் தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கின்ற விஷயங்களுக்கு அவர்கள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும், இந்த சபையிலேயோ அல்லது மக்களிடத்திலேயோ, அல்லது கட்சிக்குள்ளேயோ ஆழமாக விவாதித்து ஒரு நிலையெடுக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்படலாம். அந்த அடிப்படையிலேதான் நாங்கள் கொண்டுவந்திருக்கிறோம். சூன் மாதம் 16-ம் தேதியிலிருந்து பல இடங்களில் விவசாயிகள் போராட்டக் குழுவின் வேண்டுகோளின்படி கலெக்டர் ஆபீஸ்களிலும், தாசில்தார் ஆபீஸ்களிலும் மறியல் செய்தார்கள். அதிலே சிறை சென்றவர்களில் சட்ட மன்ற உறுப்பினர்களும் சிலர் இருக்கிறார்கள். மதுரை சிறையில் நானும் கோபால் அவர்களும், சுப்பு அவர்களும், இன்னும் மூன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களும் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தபொழுது மக்கள் சில கடமைகளை நம்மிடம் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கிறபொழுது மக்களுக்கு அதைப்பற்றியெல்லாம் தெரிவிக்கக் கூடிய முறை என்ன, எந்த மாதிரி 'டிஸ்அப்ருபல் ஆப் பாலிசி'யைத் தெரிவிப்பது, எந்த முறையில் 'வான்ட் ஆப் கான்பிடன்சை' தெரிவிப்பது என்று யோசித்தோம். அந்த முறையிலேதான் இப்படிக்கொண்டுவர வேண்டும் என்ற முறையிலே கொண்டுவந்தோம். ஏதோ ஹாண்டே அவர்கள் தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும், ஆளும் காங்கிரஸ் கட்சியும், ஸ்தாபன

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 ஆகஸ்ட் 9

காங்கிரஸ் கட்சியும் அணிவகுத்துவிட்டார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிச் சொல்வதற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? எப்படி அது உருவாகியது?

விவசாயிகள் போராட்டத்தை நாங்கள் நடத்தியபொழுது அதற்கு ஸ்தாபன காங்கிரஸ் கட்சியும் சரிதான் என்றது, ஆளும் காங்கிரஸ் கட்சியும் சரிதான் என்றது, அதேமாதிரிதான் சுதந்திரா கட்சியும் சரிதான் என்றது. இந்த விவாதத்திற்குப் பிறகு பார்வர்ட் பிளாக் கட்சியும் சரியென்று சொல்வார்கள், அதேபோன்று முஸ்லீம் லீக் கட்சியும் சரியென்று சொல்வார்கள். (திரு. கே. கந்தசாமி: இல்லை, இல்லை) விவாதத்திற்குப் பிறகு என்று தான் சொன்னேன். இப்பொழுதே அதை எப்படிச் சொல்லமுடியும்? விவாதத்திற்குப் பிறகுதான் தெரியும் . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தாங்கள் மற்ற கட்சிகளையும் இழுக்கிறீர்கள். ஆனால் உங்கள் கட்சிக்குள்ளேயே சிலர் இதை மனமார ஆதரிக்காமல் இருக்கிறார்கள். அதையும் பார்த்துக் கொள்ளுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: எங்கள் கட்சியைப்பற்றி அமைச்சரவர்கள் அவ்வளவு கவலைப்பட வேண்டாம். உங்களுடைய கட்சிக்கு ஆபத்து வெகு வேகமாக வந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருப்பதாலும், வேறு சிலபல காரணங்களாலும் கட்டுப்பாடாக இருப்பது மாதிரி தெரியும். ஆனால் அது உடையும்பொழுது பயங்கரமாக உடையும். உடையாது என்று நினைத்தவர்கள் எல்லாம் உடைந்து விட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வலது, இடது என்று உடைந்ததை வைத்துக்கொண்டு பேசுகிறார்கள். இங்கு அப்படி உடையாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: திராவிடக் கழகமாக இருந்தது திராவிட முன்னேற்றக் கழகமானது. திராவிட முன்னேற்றக் கழகமும் தி.மு.க. முன்னேற்றக் கழகமாக ஆகலாம். வருங்காலத்தில் ஆசியலிலே என்னென்ன நடக்கும் என்று கூறக்கூடிய மகானுபாவர்கள் இல்லை. ஒரு சமயத்திலே பெரிய மகாநாட்டிலே உலக உருண்டையைப் போட்டு உலகத் தலைவர்களாகப் போட்டிருப்பதைப் பார்த்தேன். உலகத் தலைவர்களாக இருக்கலாம், ஆனால் இப்படிப்பறை அறிவிப்பதை இப்பொழுது பார்க்க முடிகிறது. இவர்களெல்லாம் உலகத்தில் பெரியவர்கள் என்று மகாநாட்டிலே அறிவிக்கும் முறை வந்திருக்கிறது. இந்தத் தலைவர்களைப்பற்றி வருங்காலத்திற்குத் தெரியும். என்னுடைய

1972 ஆகஸ்ட் 9] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அனுபவம் கொஞ்சம்தான். சிலசில தத்துவங்களைப் புரிந்துகொண்டு என்னென்ன முறையில் வரும் என்பதை நினைக்கிறேன். ஆதரிப்பவர்களே கடைசியிலே நடுநிலைமை வகித்தார்கள். அன்றைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்தவர்கள் ஓட்டுப்போடும் நேரத்தில் ஓட்டுப்போடாமல் இருந்தார்கள். அந்த நிலைகூட இன்றைக்கு வரலாம். இன்றைக்குக் கூட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்காமல் இருப்பவர்கள் பிறகு அதை ஆதரிக்கலாம்.

நம் முன்னால் இருப்பவர்களிடம் விஷயத்தைச் சொல்வது ஒருபுறம் இருந்தாலும் மேற்கொள் காட்டுவது நல்லது என்று கருதுகிறேன். பெரிய மெஜாரிட்டி இருக்கிறது, மெஜாரிட்டி இருக்கிறது என்று மட்டும் பார்த்தால் அது சரியாக இருக்காது.

"மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் இன்றைக்கும்கூட எண்ணிக்கையைப் பாருங்கள் என்று சொன்னார். நேற்றும் சொன்னார். சந்தர்ப்பம் கிடைக்கிற நேரத்தில் எல்லாம் சொல்வார். எத்தனை முறை வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளட்டும். எண்ணிக்கையில் பெருத்தவர்கள் அவர்கள். ஆனால் நிச்சயமாக நியாயம் என்பது எண்ணிக்கையைப் பொறுத்தது மட்டும் அல்ல. எண்ணத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. மனதைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்று சொல்லிவிட்டு பிறகு கந்தசாமி கருப்பாக இருக்கிறார், காக்கையும் கருப்பு தான். ஆகவே கந்தசாமியும், காக்கைதான் என்று சொன்னால் கந்தசாமி காக்கை ஆகிவிட மாட்டார்" என்ற கருத்தை அண்ணா சட்டமன்றத்திலே 30—10—1957-இல் கூறினார். எண்ணிக்கையை மட்டும் வைத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். எண்ணிக்கையை மட்டும் வைத்துக்கொண்டு நியாயம் இருக்கிறது என்று சொன்னால் சூரியனே கிழக்கிலிருந்து உதயம் ஆகவில்லை, மேற்கிலிருந்துதான் உதயம் ஆகிறது என்றுகூடத் தீர்மானம் போட்டுவிடலாம். சாதாரணமாகப் பார்லிமெண்டில் சொல்வதுண்டு, 'பார்லிமெண்ட் கேன் லேஜிஸ்லேட் ஃபார் எனிதிங்' என்று மெஜாரிட்டியை மட்டுமே வைத்து எதையும் செய்ய முடியும் என்பதற்காகத்தான் சொல்வார்கள். ஆகவேதான் இந்த ஒரு விஷயத்தை மட்டும், மெஜாரிட்டி என்ற கருத்தை மட்டும் வைத்துக் கொண்டு எங்களிடத்திலே மேஜாரிட்டி இருக்கிறது, ஆகவே, எப்படியும் நாங்கள் கொண்டுவரும் தீர்மானத்தை நிறைவேற்றிவிடுவோம், நீங்கள் எதைவேண்டுமானாலும் சொல்லுங்கள் என்று கவனக் குறைவாக இருக்க வேண்டாம் அல்லது நாங்கள் சொல்வதை அலட்சியப்படுத்த வேண்டாமென்று முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[1972 ஆகஸ்ட் 9

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்களுடைய தீர்மானத்தை அலட்சியப்படுத்துவதாகவோ அல்லது உங்களுடைய பேச்சைக் கவனிக்காமல் இருப்பதாகவோ கூறுவது மிகமிகப் பொருத்தமற்ற ஒன்றாகும். மதிப்பளிக்க வேண்டுமென்பதற்காகத்தான் அவ்வளவு அமைச்சர்களும் இருக்கின்றோம், அலட்சியப்படுத்தக் கூடாது என்பதற்காகத்தான் இடையிடையே சமாதானம் சொல்லி வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நன்றி. குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றி சில தகவல்களாகச் சொல்லி விஷயத்தைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

முதலாவதாக இந்த அரசைப் பொறுத்தவரையில், ஏற்படக் கூடிய சில சிக்கல்களை எதிர்பார்த்து அதற்கான வழிமுறைகள், அதை எப்படித் தீர்த்து வைப்பது என்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இதற்கான விவரங்களைச் சொல்லுகிறேன். இது என்னுடைய முதல் குற்றச்சாட்டு. இரண்டாவதாக, ஏதாவது ஒரு இயக்கம் நடந்தால் ஆரம்பத்திலேயே அந்த இயக்கத்தின் தன்மையைப் புரிந்துகொண்டு அதனுடைய சாதக பாதகங்களை எடுத்து எப்படித் தீர்க்கலாம் என்பதற்குப் பதிலாக, நமக்கு மெஜாரிட்டி இருக்கிறது, நாம் ஆளுங்கட்சி, நம் கையிலே ஸ்டேட் பவர் இருக்கிறது, இதை வைத்துக்கொண்டு இதைச் சமாளித்து விடலாம் என்ற கருத்தும் மேலோங்கி இருக்கிறது. இதற்குக்கூட நான் மறுபடியும் அண்ணா அவர்கள் தந்த மேற் கோளைத்தான் காட்டலாம் என்று நினைக்கிறேன். எந்தப் பிரச்னையையும் முளையிலேயே அணுகினால் தீர்க்க முடியும் என்று கூறிய அரசியல் தத்துவத்தை உங்களுக்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆரம்பத்திலேயே எடுத்து வைத்தால் லேசாகத் தீர்க்கமுடியும், முற்றிப்போன பிறகு கௌரவப் பிரச்னையாக மாறி அது என்ன பிரச்னை என்றே தெரியாமல் போய் விடுகிறது என்ற விஷயத்தையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்னொன்று, பின்னால் முடிக்கும்பொழுது ஃபார்வர்ட் பிளாக் நண்பர்களுக்குச் சில விஷயங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். முத்துராமலிங்கத் தேவர் பற்றிச் சொன்ன விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்து, லா அண்ட் ஆர்டர் விஷயத்தை நாம் எப்படிப் பார்த்தோம்? கவர்னர் சுற்றுலா சென்ற பொழுது நெல்லை மாவட்டத்தில் மனுக் கொடுத்ததைப் பார்த்தோம். கவர்னரிடம் கொடுத்தால் என்ன? கவர்னர் என்ன? என்ன? அவரால் எந்த முடிவும் செய்ய முடியாது. இது ப்ராப்பராக கான்ஸ்டிடியூஷனல் பொசிஷன்.

"I am aware of the people meeting the Governor. Anybody is free to meet the Governor but only the Government could take decisions on the issue and implement them.

1972 ஆகஸ்ட் 9] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இதைத்தான் நேற்று பத்திரிகையில் பார்த்திருக்கிறோம். கேரளா முதல மைச்சர் சொல்லியிருக்கிறார். அங்கு குறிப்பிட்ட பிரச்னையில், பள்ளிக்கூட விவகாரத்தில் அங்கிருந்தவர்கள் கேட்கிறார்கள், கவர்னரைப் போய்ப் பார்த் தார்களே, உங்களைக்கூடக் கேட்காமல் பார்த்தார்களாமே என்று கேட்டதற்கு அவர் நிதானமாகச் சொல்லியிருக்கிறார் கவர்னரைப் பார்ப்பதற்கு யாருக்கும் அனுமதி உண்டு, ஆனல் கொள்கைபற்றி முடிவெடுக்க அரசாங்கத்திற்கு அதி காரம் உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். அம்மாதிரி கவர்னரிடத்திலே தந்த முறையீடுகளைத் தயவு செய்து இந்த அரசு எடுத்துப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், குறிப்பாக இந்த லா அண்ட் ஆர்டர் பொசிஷன் சம்பந்தமாக.

அடுத்த விஷயம். பொதுவாக என்னைப் பொறுத்தவரையில் எல்லோரும் முக்கியமானவர்கள்தான். சாதாரணமாகக் கிழ்த்தட்டில் இருக்கின்ற மனிதனுக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டும். ஆனல் சில விஷயங்களில் பொறுப்பான பதவியில் இருப்பதால் பாதுகாப்பு உண்டு என்று சொல்லப் படுகிறது. திண்டுக்கல் சட்ட மன்ற உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்களுடைய வீட்டிற்குப் படைபடையாகச் சென்றதைப்பற்றி அவரே சொல்லட்டும். அவ்வாறு சென்றது சரிதானு? சுந்தரம் ஒருவராய் இருந்தால் அவர் உயிருக்கே ஆபத்து என்ற நிலே தமிழ்நாட்டில் இருந்தால், இரவு 1 மணி 2 மணிக்கு ஆயுதபாணிகளாகப் புகுந்து வீட்டைத் தாக்குவதும், சுந்தரம் தப்பித்ததே தம்பிரான் புண்ணியம் என்ற நிலே இருப்பதால் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஒன்று, இந்தப் புள்ளியை வைக்க அரசு தயங்கினுல் மக்களே பார்த்து முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நிலேயேற்படும். சாதாரண பொறுப்பில் உள்ளவர்கள் வீட்டில் இருக்க முடியாது என்ற நிலே கண்டிப்பாக ஏற்படக்கூடாது என்று அமுத்தந் திருத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

அதேமாதிரியாக சிறையிலே ஒரு சட்டமன்ற உறுப்பினர், சுப்பு அவர்கள் இருக்கும்பொழுது அவருடைய வீடு தாக்கப்படுகிறது. தாக்கப்பட்டபிறகு போய்ப் பார்த்து வந்தபிறகு முழுதும் சொல்கிறேன், சுப்பு வீட்டைத் தாக்கி, வீட்டிலே மனிவி இல்லே, வெளியிலேயிருந்த படத்தை உடைத்துவிட்டார்கள். அவர்களிடம் போலீஸ் அதிகாரி சொல்கிறார், இது சாதாரண வீடு இல்லே, எம்.எல்.ஏ. வீடு, விவகாரம் ஆகிவிடும் என்று சொல்கிறார்கள். இதைச் சொன்னதைப்பற்றி விசாரிக்கட்டும். இப்படியாகப் போலீசார், இந்த வீட்டைத் தாக்கினுல் விவகாரம் பண்ணுவார்கள், போய்விடுங்கள், இந்த வீட்டைத் தாக்கினுல் பரவாயில்லே, இந்த வீட்டைத் தாக்கினுல் தவறு என்று

[திரு. கே. டி.. கே. தங்கமணி] [1972 ஆகஸ்ட் 9

சொல்லக்கூடிய நிலை ஏற்பட்டால், அப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான நிலை வந்தால் அது பரிதாபகரமானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹாண்டே அவர்கள் சொன்னார்கள் நான் பல கூட்டத்தில் சொல்லியிருக்கிறேன். ஸ்டேட் மெஷினரியை வைத்து அமைதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. நாங்கள் 144-ஐ மீறினால் கைது செய்ய வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது, மறியல் செய்தோம் என்றால் கைது செய்ய வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. நாளைக்கு பந்த் நடக்கிறது என்றால் லா அன்ட் ஆர்டர் பொசிஷன் வந்துவிடும், அதைப் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு யாருக்கு இருக்கிறது? அந்த அரசு என்பது யார்? அரசைச் சேர்ந்த கட்சியா? அண்ணு அவர்களே சொல்லியிருக்கிறார்கள், அரசுக்கும் கட்சிக்கும் வித்தியாசம் தெரியவில்லையே, இது எக்காலத்தில்தான் முடியும் என்று வேதனையோடு பேசியிருக்கிறார்கள். மதுரை எனக்குத்தான் சொந்தம் என்ற அகம்பாவம் இருந்தால் என்ன மோசமான நிலை ஏற்படும்? 5-ம் தேதி மூடிய கடைகள் திறக்கப்பட்டன என்பதை மறுக்க முடியுமா? நான் விவரங்களைக் கொடுக்கிறேன். மூடிய கடைகள் திறக்கப் பட்டன. முன்னால் ஜீப் போக, அடுத்தாற்போல் ஒரு ஊர் பெரியவர் காரில் போக, அடுத்தாற்போல போலீஸ் ஜீப், அதற்குப் பின்னால் இரண்டு லாரி, இரண்டு லாரிகளிலும் ஒவ்வொரு லாரியிலும் சுமார் 50 பேர் ஃபுல்லாக கள்ளு, சாராயம், பிராந்தி குடித்துவிட்டு, ஆயுத பாணிகளாக வந்து இறங்கி நின்று மூடிய கடைகளை திறக்கவேண்டும் என்று சொல்கின்ற நிலைமை இந்த நாட்டில் நடந்தது 5-ம் தேதி மதுரை நகரத்தில். இல்லை. என்று மறுக்க முடியுமா? இம்மாதிரி ஒரு நிலைமை ஏற்பட்டது என்று சொன்னால், ஆட்சி இதை ஒடுக்கமுடியவில்லை என்று சொன்னால், கட்சியில் இருக்கும் ஒரு சிலரை ஆயுதபாணிகளாக வைத்துக் கொண்டு எதையும் செய்யக்கூடும் என்று மக்களை மிரட்டினால், மதுரை மக்களே எதிரடி கொடுக்கவேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அடிக்கு அடிகொடுப்போம் என்று கோகலே ஹால் கூட்டத்தில் உங்கள் தலைவர் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார். அதற்குத்தான் மதுரை முத்து அவர்கள் கண்ணப்பர் திடலில் பேசும்பொழுது பதில் சொன்னார்.

திரு. கே. டி.. கே. தங்கமணி: மதுரை நகரத்தில் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. நீங்களே விசாரித்துப் பார்க்கலாம்.

1972 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அடிக்கு அடி கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்று சட்ட மன்றத்திலேயே பேசுகிறீர்கள். கோகலே ஹால் கூட்டத்தில் உங்கள் தலைவர் இதே ரீதியில்தான் பேசினார். அதற்குத்தான் மதுரை முத்து பதில் சொன்னார்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நியாயம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு பொறுப்பான மெம்பர் என்ற முறையில் நான் சொல்கிறேன். இது மதுரையில் நடந்த சம்பவம். முன்னாலே போலீஸ், அடுத்து மதுரைப் பெரியவர், அடுத்தாற்போல் போலீஸ் ஜீப், அதற்குப் பின்னால் இரண்டு லாரிகள், அதிலே ஆயுத பாணிகளாக ஆட்கள் இறங்கி மூடிய கடைகளைத் திறக்கவேண்டும் என்று மிரட்டினார்கள். இம்மாதிரி நடந்தது நியாயம் என்று அரசு கருதுகிறதா, அப்படி நியாயம் என்று கருதுகிறது என்று சொன்னால், நான் வேறு வாதத்திற்கே போகவில்லை. இம்மாதிரிச் சம்பவம் நடந்ததா, இல்லையா என்று நீங்களே விசாரியுங்கள். உங்கள் கட்சியில் இருக்கிறவர்கள் கொண்ட ஒரு குழுவை அனுப்பி மதுரையில் இப்படி நடந்தது உண்மைதானா என்று விசாரியுங்கள். தங்கமணி பொறுப்பு இல்லாமல் சொல்லுகிறான் என்று கருதினால் நான் சொல்வது சரியா, இல்லையா என்று நீங்களே விசாரித்துப் பாருங்கள். நான் சொல்வது தவறு என்று சொன்னால், நான் எந்தத் தண்டனையை வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முன்பே அப்படித் தெரிவித்தது பற்றி விசாரித்தேன். விசாரணையில் தெரியவந்தது என்னவென்றால், அப்படி யாரும் நடக்கவில்லை என்பதுதான். ஆனால், கடைகளையெல்லாம் மூடுங்கள் என்பதற்காகத்தான் சில பேர்கள் அதே ரீதியில் வேன்களை எடுத்துக்கொண்டு, கள், சாராயம், பிராந்தி குடித்துவிட்டு, கடைகளை மூடுங்கள் என்று சொல்லிக் கொண்டு சென்றதாக நான் கேள்விப்படுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அதற்கு அதே பாஷையில் நான் பதில் சொல்கிறேன். 2, 3, 4-ம் தேதிகளில் மதுரையில் 2,500 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 1,000 பேர்கள் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். 1,500 பேர்கள் லாக்கப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். கடைகளை மூட வேண்டும் என்று சொல்லக்கூடியவர்களையெல்லாம்தான் உள்ளே பிடித்துப் போட்டுவிட்டீர்களே? இவர்களையெல்லாம் உள்ளே பிடித்துப்போட்டு விட்டு, அதற்குப் பின்னாலே வெளியே இருப்பவர்களை மிரட்டி இந்த மாதிரிக் காரியங்களைச் செய்வது என்றால், அது ஒரு தைரியமான காரியம் என்றே, எந்த

[1972 ஆகஸ்ட் 9

அரசும் நியாயமாகச் செய்யக்கூடிய காரியம் என்னே நான் சொல்ல முடியாது. இதிலே இருக்கக்கூடிய முக்கியமான பிரச்னை என்னவென்றால், அரசு தன்னுடைய இயந்திரத்தை உபயோகப்படுத்தட்டும். அரசு இயந்திரத்திற்கு அப்பாற்பட்டு கட்சியில் உள்ளவர்களை உபயோகப்படுத்தக்கூடாது. கட்சிக் கட்டுப்பாட்டை மீறுகிறவர்கள் பேரில் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். எங்கள் கட்சியில்கூட கட்சியின் கட்டுப்பாட்டை மீறுகிறவர்களை தட்டி உட்கார வைப்போம். கட்சிக் கட்டுப்பாட்டை மீறுகிறவர்களை ஏன் அடக்கி வைக்கக் கூடாது? அந்த முறையில் அவர்கள் நடந்துகொள்வது நியாயம் அல்ல. அவர்கள் செய்தது நியாயம்தான் என்று சொன்னால் அதற்கு மேல் நான் ஒன்றும் ஆர்க்யுமெண்ட் செய்ய முடியாது.

அரசு தன்னுடைய இயந்திரத்தை முழுமையாகப் பயன்படுத்தட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. அரசின் இயந்திரத்திற்கு அப்பாற்பட்டு சில பேர்களை ஆயுதபாணிகளாக வைத்துக்கொண்டு மக்களை மிரட்டக்கூடிய முறை சரியல்ல. போலீஸ் செய்யவேண்டிய வேலையை இவர்கள் ஏன் செய்ய வேண்டும்? போலீசுக்கு இன்பார்மெண்டு இருக்கிறார்கள். இன்பார்மெண்டு என்று சொல்லக்கூடியவர்கள் ஒரு விஷயத்தைப்பற்றி போலீசுக்குத் தகவல் கொடுப்பவர்கள். நாங்களெல்லாம் அவர்களை ஆள்காட்டிகள் என்று சொல்வோம். இதிலே முக்கியமாக இருக்கக்கூடிய பிரச்னை என்னவென்றால் இவர்கள்தான் எதிரிகள், இவர்களைப் பிடியுங்கள் என்று சொல்வதற்குக் கட்சியின் அமைப்பில் உள்ளவர்களை ஏன் ஆள்காட்டிகளாக உபயோகப்படுத்த வேண்டும்? குறிப்பிட்ட இயக்கம் பிடிக்காமல் இருக்கலாம். அதில் யாரைப் பிடிக்கவேண்டும் என்று கண்டுபிடிக்கவேண்டிய பொறுப்பு ஸ்டேட் மெஷினரிக்குத் தான் இருக்கவேண்டும், கட்சியில் உள்ளவர்களுக்கு அல்ல. அரசினர் ஸ்பெஷல் பிராஞ்சு போலீஸ் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும் யாரைப் பிடிக்கவேண்டும் என்று, அவர்கள் சொல்லட்டும். அதற்குப் பதிலாக ஒரு கட்சியிலிருப்பவர்கள் அந்தக் காரியத்தில் ஈடுபடுவது என்று சொன்னால் அது முறையல்ல. இப்படிப்பட்ட போக்கு மாறவேண்டும். ஜனநாயகம் என்று சொன்னால், சோஷலிஸ ஜனநாயகத்தில் நான் நம்பிக்கை கொண்டவன். பார்லிமெண்டரி முறையில் அரசியல் சட்ட அமைப்பின்கீழ் கொண்டு வரப்படுகிற சோஷலிச ஜனநாயகத்தை நான் பிரதிபலிக்கிறவன். அதற்கு விரோதமான காரியங்கள் நடந்தன என்று சொன்னால், அப்பேர்ப்பட்ட காரியங்களைத்தான் நான் இங்கே என்னுடைய பேச்சிலே விவரமாக எடுத்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நான் அதிகமாக விவரங்களுக்குள் போக விரும்பவில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட பல சம்பவங்களைப் பற்றிச் சொன்னார். எனக்கு இரண்டு மணி நேரம் வேண்டும்.

1972 ஆகஸ்ட் 9] [திரு. கே. டி. கே. தங்கமணி]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் கொண்டதுபோல நீங்களும் 1¼ மணி நேரம் பேசலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: Sir, even on the general principles I have taken enough time.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பிரின்ஸிபிள் எதுவும் கிடையாது. ஆளும் கட்சியில் இருப்பவர்களும், ஒவ்வொரு உறுப்பினரும் 5 மணி நேரம் பேசவேண்டும் என்று சொன்னால், தி.மு.க. வைச் சேர்ந்த அத்தனை உறுப்பினர்களும் பேச ஆரம்பித்தால் சட்ட மன்றத்தை எப்படி நடத்த முடியும் என்று சொல்லுங்கள்.

THIRU K. T. K. THANGAMANI: Sir, I leave it to you. If the Chair says like that, I will stop.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அப்படிச் சொல்லப் போவதில்லை. என் மீது வருத்தப்பட்டு பிரயோசனம் இல்லை. நீங்கள் எவ்வளவு நேரம் பேச வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதைப்போல ஆளுங் கட்சியில் இருப்பவர்களும் அவ்வளவு நேரம் பேசவேண்டும் என்று சொல்லலாம். தீர்மானத்தை ஆதரிப்பவர்கள்தான் இவ்வளவு நேரம் பேச வேண்டும், தீர்மானத்தை எதிர்ப்பவர்கள் பேசக்கூடாது என்பது அல்ல. அவர்களும் பேசவேண்டும் என்று சொல்லலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஆளும் கட்சியினரும் பேசலாம். எல்லா அமைச்சர்களும்கூடப் பேசலாம். பேசுவதற்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு அமைச்சரும் 5 மணி நேரம் பேசவேண்டும் என்று சொன்னால், சட்டமன்றத்தை எப்படி நடத்துவது? ஆகவே டாக்டர் ஹாண்டே அவர்களை அனுமதித்தது போல், நீங்களும் 1¼ மணி நேரம் பேசலாம். நீங்கள் சரியாக 12—55-க்குத் துவக்கினீர்கள் என்பதையும் குறிப்பில் வைத்துக்கொள்ளுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: Sir, I accept your calculation of the time and I am not going to test it.

விவசாயிகள் பிரச்னையைப்பற்றி இங்கே கூறலாம் என்று நினைக்கிறேன். இந்த விவசாயிகள் பிரச்னையைப் பொறுத்தவரையில், கோவை மாவட்டத்தில்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 ஆகஸ்ட் 9

இருக்கக்கூடிய விவசாயிகள்—அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று சொல்ல முடியாது—அவர்கள் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்ற ஒரு குறிப்பிட்ட கோரிக்கையை வைத்து, அவர்கள் இயக்கம் நடத்தினர்கள் அதைப் பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஆதரித்துப் பேசினர்கள். ஜூன் 19-ம் தேதி பெருமாநல்லூரில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது, 3 பேர்கள் இறந்தார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். இரண்டு மோட்டார் வைத்து பம்பு செட்டுகளை இயக்க வேண்டும் ஆழமான கிணறுகளில். அப்படியிருக்கும்பொழுது 12 பைசா என்பது 24 பைசாவாகத்தான் கட்டவேண்டிவரும் என்பதைக் காரணமாகக் காட்டினர்கள். ஆகவே, மின்சாரக் கட்டணம் அதிகமாக இருக்கிறது என்று கோவையிலும், சேலத்தில் சில பகுதிகளிலும் இதைப் பிரச்னையாக்கினர்கள். அத்துடன் சில கோரிக்கைகளையும் வைத்தார்கள். 12 அம்சக் கோரிக்கைகளை வைத்தார்கள். இந்தக் கோரிக்கைகளை வைத்து விவசாயச் சங்கம் இயக்கம் நடத்திக்கொண்டு வந்தது. விவரம் அரசாங்கத்திற்குத் தெரியும் என்றாலும், சபைக்குத் தெரியவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இந்த இயக்கத்தில் மன்றாடியார் அவர்களும் இருந்தார்கள். மன்றாடியார் மட்டுமல்ல, அவருடன் மற்ற விவசாயிகளும் இருந்தார்கள். மன்றாடியார் இயக்கம் என்று பேசப்படுகிறது. மன்றாடியாரோடு, அதிலே பல விவசாயிகளும் இருந்தார்கள். பல பேர்களும் சிறைச்சாலைக்குச் சென்றார்கள். பல பேர் கைது செய்யப்பட்டார்கள். இப்படியெல்லாம் கைது செய்யப்பட்டிருக்கக்கூடாது. கைது செய்வது என்றால் எப்படி செய்தார்கள்? செக்ஷன் 144 ஐந்து பேருக்குமேல் கூடுவது, செக்ஷன் 341—மறியல். கிரிமினல் திருத்தச் சட்டம் 7-வது பிரிவு; இப்படியா? கிரிமினல் திருத்தச்சட்டம் 7-வது பிரிவை அரசு தயவுசெய்து உபயோகப்படுத்தக்கூடாது. காரணம் அந்தச் சட்டம் உருவானது எப்படி? 1931-ல் ஐந்து பேராகப் போய் மறியல் செய்வதற்குப் பதிலாக நான்கு நான்கு பேராகப் போய் மறியல் செய்வார்கள். வெல்லிங்டன் ஆட்சிக் காலத்தில் ஐந்து பேராக அவர்கள் இல்லை என்பதால் அவர்களைக் கைது செய்ய முடியவில்லை. அப்போதுதான் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்தார்கள், ஐந்து பேரானாலும்சரி, நான்கு பேரானாலும்சரி, ஒருவரானாலும்சரி, மறியல் செய்கிறவர்கள், அவர்களுக்குத் துணையாக நிற்பவர்கள், அவர்களுக்கு உதவி செய்பவர்கள் யாராக இருந்தாலும் கைது செய்யப்படுவதற்கு ஏதுவாக அந்தச் சட்டம் அந்தக் காலத்தில் திருத்தப்பட்டது. அந்த ஆக்ட் படித்தான் 1946-ம் ஆண்டு எஸ். ஆர். வி. எஸ். ஸ்ட்ரைக்கில் நான் கைது செய்யப்பட்டேன். அப்போது மூன்று மாநிலங்களும் சேர்ந்திருந்த காலம். அப்போது இந்தச் சபையில்

1972 ஆகஸ்ட் 9] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நம்பியார் அவர்கள் இது சம்மந்தமாக கேள்வியினை எழுப்பியபோது பிரகாசம் அவர்கள் சொன்னார்கள், So far as my Government is concerned, I will not use this section to suppress the Opposition.

இந்தச்சட்டத்தின் கீழான வழக்கினை அரசு நடத்தியிருந்தால், அதை சுப்ரீம் கோர்ட்டுக்கே எடுத்துச் சென்று, இந்தக் கிரிமினல் திருத்தச்சட்டம் 7-வது பிரிவு அரசியல் சட்டத்திற்கே முரணானது என்று எடுத்துக்காண்பித்திருக்கமுடியும். காரணம் அஃபென்ஸ் இஸ் நாட் ஸ்பெஸிஃபிக்.

கேட்டார்கள், 'நீங்கள் மறியல் செய்தீர்களா' என்று. செய்தோம். ஆனால் 'இந்த சார்ஜ் ஷீட்படிக்கு நாங்கள் குற்றவாளியில்லை' என்று சொல்லித் தான் ஒரு மாதகாலம் சிறையில் இருந்தோம். இப்படி இரண்டாயிரம் மூவாயிரம் பேர்—வேண்டுமானால் இந்த விவரங்கள் சற்றுக் கூடக்குறைய இருக்கலாம், மன்னிக்க வேண்டும்—ஆனால் ஏறத்தாழ இரண்டு மூவாயிரம் பேர் கைது செய்யப்பட்டார்கள். அதனால் அந்த இயக்கம் மேலும் விரிவடைந்து விட்டது. ஆனால் இதே நேரத்தில் சாத்தூரில் 600 பேர் கைது செய்யப்பட்டார்கள். இந்த இயக்கத்திற்கும் அவர்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. மின்சாரக் கட்டணத்தினையொட்டிய போராட்டத்திற்கும் அவர்களுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. அவர்களுடைய குறைகள் எல்லாம் தாங்கள் உற்பத்தி செய்யும் விவசாயப் பொருள்களுக்கு சரியான விலை கிடைக்க வில்லை. அதே நேரத்தில் அவர்களுக்குக் கடன் பளுவும் உயர்ந்துகொண்டே வருகின்றது. கிணறுகளில் தண்ணீர் இல்லாத காரணத்தினால் பாசனமும் பாதிக்கப்பட்டு விட்டது. இந்த நிலையில் அவர்களால் கடன் தொகைகளைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. மற்றவர்கள் விஷயத்தில் பாக்கிகளை வசூல் செய்யும் போது நீதி மன்றங்களில் வழக்குப்போட்டு 'டிக்ரி' வாங்கி பாக்கித் தொகைகளை வசூலிப்பார்கள். ஆனால் இவர்கள் விஷயத்தில் எடுத்த உடனேயே 'ஜப்தி' என்றுதான் ஆரம்பிக்கின்றார்கள். இதைத்தான் விவசாயிகள் எதிர்த்தார்கள். ஆனால் அரசு எல்லாவற்றையும் ஒன்றுகப் பிணைத்ததால் இங்கேயும் விவசாயப் போராட்டம் சற்று வலுப்பெற்றது. அதையொட்டித்தான் சாத்தூரிலும், ஸ்ரீவில்லிப்புத்தூரிலும் இப்படிப்பட்ட விவசாயப் போராட்டங்கள் உருவாயின. ஸ்ரீவில்லிப்புத்தூரிலாவது அந்தப் போராட்டத்தில் சில கட்சியினர் கலந்து கொண்டனர். ஆனால் சாத்தூரில் அப்படியில்லை. முழுக்க முழுக்க விவசாயிகளே அதை நடத்தினார்கள்.

இப்படி இருக்கும்போதுதான் ஜூன் மாதம் 7-ஆம் தேதியன்று கோவையில் பதினாயிரம் வண்டிகள் என்று சொல்லுகிறார்கள், நிச்சயமாக

[திரு. கே. டி.. கே. தங்கமணி] [1972 ஆகஸ்ட் 9

பத்தாயிரம் வண்டிகளுக்கு மேல் இருக்கலாம். இவ்வளவு வண்டிகளை ஒரு நகரத்தில் கொண்டு வந்து சேர்த்தால் அந்த நகரின் நிலை என்ன ஆகும் என்று புரிந்துகொள்ளலாம். அந்த நகரமே ஸ்தம்பித்துப்போய்விட்டது. அதைப் பற்றி நமது நண்பர் குமாரசாமி அவர்களே விவரமாகச் சொல்லுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அவர்கள் இங்கே இருக்கிறார்கள். எனவே அவரே அதை விளக்கமாகப் பேசுவார் என்று எதிர்பார்க்கிறேன். அத்தப் போராட்ட காலத்தில்தான் நீலகிரி மாவட்டத்திலிருந்து மாற்றலாகி வருகிறார் கோவை மாவட்ட கலெக்டர். வந்து சேர்ந்தவுடன் இருக்கும் நிலைமையைப் பார்க்கிறார். நிலைமையைப் புரிந்துகொள்கிறார். பிறகு போராட்டக்குழுவின் தலைவருடன் நேரிடையாகப் பேசுகிறார். பிறகு போராட்டம் திரும்பப்பெறப் பட்டதாக செய்தி பத்திரிகையில், இப்படி ஒன்றுமே நடக்கவில்லை, தங்கமணி சொல்வதெல்லாம் பொய் என்று சொன்னால் அது வருந்தத்தக்கதாகும். நான் பொய் சொல்வதில்லை. ஆனால் முதலமைச்சர் அவர்கள் நான் சொன்னதைப் பொய் என்று சொல்லிவிட்டார்கள். ஊர்வலத்தில் கொடுத்த கோஷங்களைப் காதால் கேட்டேன். 'சுய ஆட்சி, மறுத்தால் தனி ஆட்சி' என்று சொன்னதைக் காதால் கேட்டேன். ஆனாலும் முதலமைச்சர் அவர்கள் நான் சொல்வது பொய் என்று சொல்லி விட்டார். எனவே நான் சற்று எச்சரிக்கையோடு பேசவேண்டியிருக்கிறது. அந்தநேரத்தில்தான் விவசாயக் குழு மற்ற அரசியல் கட்சியினரைச் சந்திக்கின்றார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சரிவரச் சொன்னால் சரியாக இருக்கும். குமாரசாமி அவர்கள் அங்கே கலெக்டரிடம் என்ன எழுதிக் கொடுத்தார், இங்கே வந்து என்ன சொன்னார் என்று தெரியவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: குமாரசாமி அவர்களே இங்கே இருக்கிறார். அவரே நடந்ததைச் சொல்லுவார். பத்திரிகையில் வந்ததைத்தான் நான் சொல்ல முடியும். ஆனால் ஒரு 'காண்ட்ரொவெர்ஸி' இருக்கிறது என்பதை அறிய முடிந்தது. ஆனால் உள்ள நிலையில் இந்தப் போராட்டத்தை எல்லா மாவட்டங்களுக்கும் முறையாக எடுத்துச்செல்ல வேண்டும் என்ற முடிவை போராட்டக்குழு செய்தது. அந்த முடிவில் எனக்கும் பங்கு இருந்தது. இந்தப் பன்னிரண்டு அம்சக் கோரிக்கையில் பல விஷயங்களை மாற்றியமைத்தோம். விவசாய விளைபொருள்களுக்கு வரி கூடாது என்பது முதல் அம்சம். ஆனால் பின்னர் அதை மாற்றி, விவசாயப் பொருள்களுக்கு வரி விதிக்கும் முறையை மாற்றியமைக்க வேண்டும் என்று போட்டோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 'பயிர் வரி கூடாது' என்றுதான் இருக்கிறது.

1972 ஆகஸ்டு 9]

திரு. கே. டி. கே. தங்கமணி: பயிர் வரி விதிக்கப்படும் முறைதான் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வரியையே ரத்து செய்ய வேண்டும் என்று இருப்பதில் உங்கள் கையெழுத்து இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: பின்னால் நாங்கள் திருத்தி அமைத்ததில் அது மாற்றப்பட்டுவிட்டது. நீங்கள் பழைய கோரிக்கைகள் கொண்டதையே வைத்துக்கொண்டு பேசுவதில் பிரயோசனம் இல்லே. பயிர் வரி முறையைத்தான் மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறது. ஒரு அரசு ஊழியர் 500 ரூபாய் சம்பளம் பெறுகிறார் என்றால் அந்த ஊதியத்தினைப் பெறுவதற்காக அவர் எதையும் செலவழிப்பதில்லே. அங்கே மொத்த வருமானத்தில் வரியைக் கணக்கிடுவது பொருத்தமாக இருக்கலாம். ஆனால் விவசாயத்தைப் பொறுத்த வரையில் ப்ரொடக்ஷன் காஸ்ட்டைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். பெரிய வியாபார நிறுவனத்தை எடுத்துக்கொண்டால்கூட செலவுகளெல்லாம் போக நிகர லாபத்தைத்தான் கணக்கிலெடுத்துக்கொண்டு வரி விதிக்கின்றார்கள். ஆனால் இவசாயத்தைப்பொறுத்தவரையில் ஆன செலவைக் கணக்கிலெடுத்துக்கொள்ளாமல் மொத்த உற்பத்தியின் பேரில் வரி விதிக்கப்படுகிறது. எனவே இந்த முறை மாற்றப்படவேண்டும் என்றுதான் கோரப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: The Agricultural Income-tax levied on the basis of crop should be withdrawn.
இதில்தான் நீங்கள் கையெழுத்துப்போட்டுக் கொடுத்திருக்கின்றீர்கள். எனவே உண்மைக்குப் புறம்பாகப் பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் சொல்லுவது தவருக இருந்தால் நீங்களே அதை முடிவு செய்து கொள்ளுங்கள். நாங்கள் வரி வேண்டாம் என்று சொல்லவில்லே. வரி விதிக்கும் முறையைத்தான் மாற்றியமைக்க வேண்டும் என்று சொல்கிறோம். கரும்பு பயிரிடுகிறார்கள் என்றால் ஆகும் செலவைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறோம். கரும்பு பயிரிடுகிறார்கள் என்றால் ஆகும் செலவைக் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டாமா? ஆற்றுப்பாசனமாக இருந்தால் ரூ. 45 செலவாகிறது என்றால், 'லிஃப்ட்' இர்ரிகேஷன் என்று இருந்தால் ரூ. 250 செலவாகிறது. 'ப்ரொடக்ஷன் காஸ்டு" என்ற பேசிசில் வரும்போது, பயிர் அடிப்படை என்று சொல்லுவது 'அன்கான்ஷனபிள்' என்றுதான் சொல்ல வேண்டும். நாம்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 ஆகஸ்ட் 9

விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டாமா? எனவே இந்த முறை மாற வேண்டும். வரி வாங்கட்டும், ஆனால் முறைப்படி வாங்கட்டும் என்றுதான் சொல்கிறோம். விவசாயிகள் என்று சொன்னால் அவர்களுக்கு நியாயமே கிடைப்பதில்லை.

நான் தினமும் 'தினத் தந்தி' 'முரசொலி' யைப் படிக்கின்றவன். இந்தப் பத்திரிகைகளில் இந்தக் கிளர்ச்சிபற்றி எழுதினார்கள். ஆனால் விவசாயி களுக்குச் சாதகமாக உள்ள பாயின்டுகளை முறையாக அவற்றில் எழுதவில்லை. இன்று உள்ள நிலை என்ன, ஏகபோகங்களுக்குச் சாதகமான நிலை உருவாகி யிருக்கிறது. நூல் விலை குறையவில்லை. துணி விலை குறையவில்லை. மில் தொழிலாளர்களுடைய சம்பளம் உயரவில்லை. பருத்தி உற்பத்தி திடீரென்று உயர்ந்துவிட வில்லை. ஆனாலும் பருத்தியின் விலை மிகவும் குறைந்துவிட்டிருக் கிறது. பாதிக்கப்படுகின்றவர்கள் யார்? அதை உற்பத்தி செய்யும் விவசாயி. விவசாயிக்கு எந்த அளவிற்கு அடி விழுகிறது என்று சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். இந்தமாதிரி விலையை நிர்ணயிக்கும் ஏகபோகக் கூட்டம் இருக்கிறதே, அந்தக் கூட்டத்தைத்தான் அந்தக் கோரிக்கை 'அட்டாக்' பண்ணுகிறது. எனவே இந்தப் பன்னிரண்டு அம்சக் கோரிக்கையின் அடிப் படையில் தமிழகத்திலுள்ள விவசாயிகள் ஒன்று பட்டு வந்தது உண்மையி லேயே பெருமைக்குரியதாகும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விவசாய வருமான வரிச் சட்டம் வந்தபோது, அதற்குத் தாங்கள் ஒரு திருத்தம் கொடுத்து, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, தங்கள் திருத்தத்தை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன் என்று சொல்லி, திரும்பப் பொற்றுக்கொண்டீர்கள். இப்போது அதைப்பற்றி ஏன் குறைகூறுகிறீர்கள் என்பதுதான் புரியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: அப்போது நான் அப்படி சொல்லியிருக்க லாம். அந்தச் சமயத்தில் வந்த டிபேட்டில் சொல்லியிருக்கலாம். அது வேறு விஷயம். தற்போது விவசாயிகள் பிரச்சனையில் நடைபெற்ற துப்பாக்கி பிரயோகத்தைப்பற்றி விசாரிப்பதற்காக வந்த டாக்டர் குமார், அகமது ஆகியோரை 'ஏர் போர்ட்டிலே' தடுத்து நிறுத்தியிருப்போம் என்று ஒரு முதலமைச்சர் சொல்வது முறையல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாங்கள் அப்படிச் சொன்னதாக எங்கே பார்த்தீர்கள்? நிருபர்கள் கேட்டார்கள். போலீசார் தடுத்தார் களாமே என்று. வந்தவர்களேகூட தடுத்ததாகச் சொல்லவில்லை. தடுப்பதாக

1972 ஆகஸ்டு 9] [டாக்டர் மு. கருணாநிதி]

இருந்தால் விமான நிலையத்திலேயே தடுத்து நிறுத்தியிருப்பார்கள். யாரும் அங்கே தடுத்து நிறுத்தவில்லை. அவர்கள் வருகையை நாங்கள் வரவேற்கிறோம். நீங்கள் வாலியும் விட்டுவிட்டு, தலையையும் விட்டுவிட்டு நடுவிலே இருப்பதைப் பார்த்துவிட்டு இப்படிச் சொல்கிறீர்கள். அதற்கு நாங்கள் பொறுப்பல்ல. ஒரு மாநிலத்தில் உள்ளவர்கள் அடுத்த மாநிலங்களுக்குச் செல்லலாம். விசாரிக்கலாம். வேண்டுமென்றே நீங்கள் விவாதத்திற்காக அப்படிச் சொல்கிறீர்கள். விவசாய வருமான வரி சட்டத்தை ஆதரித்துவிட்டு இப்போது அதையும் குறை கூறுகிறீர்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் அப்படிச் சொல்லவில்லை. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் அறைகூவல் இட்டுச் சொல்கிறேன். நீங்கள் இந்த மன்றத்திலேயே சொல்லியிருக்கிறீர்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அதை நான் மறுக்கவில்லை. அப்போது அந்த டிபேட்டில் நான் பேசியிருப்பேன். கலவரம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட உ.பி-யிலிருந்து வந்தவர்களைத் தடுப்பது சரியில்லை என்றுதான் சொல்கிறேன். தடுத்தாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எந்தப் பத்திரிகையில் அப்படிப் பட்ட செய்தி வந்தது? அந்தப் பத்திரிகையின் வாசகத்தைப் படித்துக்காட்ட வேண்டும். வந்தவர்களை யாரும் தடுக்கவில்லை. போலீசாரை வைத்துத் தடுத்தீர்களமே என்று நிருபர்கள் கேட்டார்கள். பெத்தநாயக்கன் பாளையம், பல்லடம் இன்னும் பல பகுதிகளுக்குப் போகும்போது தடுத்தார்களாமே என்று கேட்டார்கள். அவர்களை யாரும் தடுக்கவில்லை. அப்படித் தடுத்ததாக அவர்கள் அறிக்கை விடவுமில்லை. அகமதையும் மற்றவர்களையும் தடுப்பதாக இருந்தால் முதலிலேயே—விமான நிலையத்திலேயே தடுத்திருப்பார்கள். அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை. இந்த அரசு மீது குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காகவே அப்படிச் சொல்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: விவசாயிகள் போராட்டக் குழு என்று ஒரு போராட்டக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவிலே எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஆளும் கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள். சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். எந்தக் கட்சியையும் சேராத விவசாயக் கட்சியும் இருக்கிறது. எல்லோரும் சேர்ந்து ஒரு தீர்மானத்தைப்போட்டு,

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 ஆகஸ்ட் 1

இப்போது ஒரு முடிவெடுத்திருக்கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிலே எங்கள் கருத்தினைச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தங்கமணி அவர்களின் உரை முடியும்வரை அவையின் அனுமதியுடன் அவையின் நேரத்தை நீட்டிக்கலாம் என்று கருதுகிறேன். (பல உறுப்பினர்கள்: வேண்டாம்).

திரு. ஜே. ஜேம்ஸ்: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நாங்கள் ஊரிலிருந்து இன்றுதான் வந்திருக்கிறோம். களைப்பாக இருக்கிறது. பசியாகவும் இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு இத்துடன் முடித்துவிட்டு மீண்டும் நாளை தொடரலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நாளை வைத்துக்கொள்ளலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நாளை வேறு விஷயங்கள் இருக்கின்றன. (பல உறுப்பினர்கள்: நாளைக்கே வைத்துக்கொள்ளலாம்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இன்று இத்துடன் முடித்து விட்டு, நாளை அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

4. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

* 1. Notification issued with G.O. Ms. No. 33, Public Works, dated the 7th January 1972, in regard to exemption and reduction in respect of Electricity Tax in Area of operation of Tamil Nadu Electricity Board under the Tamil Nadu Electricity (Taxation and Consumption) Act, 1962. [Laid on the table of the House under section 17 (2) of the Tamil Nadu Electricity (Taxation on Consumption) Act, 1962 (Tamil Nadu Act 4 of 1962).]